பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆு மாசி மீ 7 உ திங்கட்கிழமை (19-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர் 84

## ஸ்ரீலங்கா படைகள் நடத்தும்
# விமான தாக்குதல்களுக்கு மேற்கு நாடுகள் கண்டனம்

## இந்தியா மௌனம் சாதிக்கிறது

கொழும்பு, பெப்ரவரி 19

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் நடத்திவரும் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் உயிரிழப்பது குறித்து ஸ்ரீலங்காவுக்கு நிதி உதவும் முக்கிய மேற்கு நாடுகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

ஆனால் இந்தியாவோ இந்த விடயத்தில் மௌனம் சாதித்தது!

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் கடந்த 7-ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்கு நிதி மற்றும் திட்டமிடல், கொள்கை வகுத்தல் அமைச்சுகளின் செயலாளரான திரு. ஆர். பாஸ்கரலிங்கம் தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்திலேயே விமானத் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் இறப்பது குறித்து, முக்கிய மேற்கு நாடுகளின் பிரதிநிதிகள் மிகுந்த பதற்றத்துடன்—கண்டித்து— பேசினார்கள்.

ஆனால் கூட்டத்தில் பங்கு

[2 பக்கம் பார்க்க]

## இந்தியாவுக்கு புதிய தூதர்

கொழும்பு. பெப். 19

இந்தியாவுக்கு இலங்கையின் புதிய தூதராக திரு. நெவில் கனரத்னா நியமிக்கப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்போது இலங்கைத் தூதராக புதுடில்லியில் பணிபுரியும் டாக்டர் ஸ்டான்லி கல்பகே இம்மாதம் 22 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகிறார். [உ-எ]

## ஒரே குடும்பத்தில் நால்வர் காரைநகரில் காயம்!

யாழ்ப்பாணம், பெப். 19

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று நண்பகல் குடியிருப்பு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வியாவில் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல் குண்டு ஒன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்தனர். பாடசாலை ஒன்றும்

[ 2 ஆம் பக்கம் பார்க்க ]

## அச்சுவேலி பாடசாலையும் ஷெல்லினால் சேதமுற்றது

அச்சுவேலி. பெப். 19

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் அச்சுவேலியில் மகா வித்தியாலயம், தென்னிந்திய திருச்சபை தேவாலய மதகுருவின் விடுதி மற்றும் பல வீடுகள் சேதமடைந்தன. சிலர் காயமுற்றனர்.

பலாலி இராணுவ முகாமில் இருந்து நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் ஏவப்பட்ட ஏழு ஷெல்கள் அச்சுவேலியில் விழுந்து வெடித்தன.

அச்சுவேலி மகாவித்தியாலய வளவில் விழுந்த

[ 2 ஆம் பக்கம் பார்க்க ]

## வல்வையில் விழுந்த ஷெல்கள்; ஒருவர் பலி; 2 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 19

பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் நேற்று அதிகாலை வல்வைப் பகுதியில் விழுந்து வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தலை பிளந்து மரணமானார்; மற்றும் இருவர் படுகாயமடைந்தனர். ஐந்து வீடுகள் சேதமடைந்தன.

நேற்று அதிகாலை 12. 30 மணியளவில் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வல்வை தீருவில், ஆலடி, வித்தனை, நிக்கொழு, தெனியம்பை ஆகிய பகுதிகளில் – மக்கள் குடியிருப்புகள் மீது — விழுந்து

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## ஹெலி, பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 19

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று ஹெலித் தாக்குதல்களும் இடம்பெற்றன. கடற்படைப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது.

காலை 8-30 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று வல்வை ஊரிக்காடு, காட்டுப்புலம், தொண்டமானாறு, கெருடாவில் ஆகிய பகுதிகளை வட்டமிட்டு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வேட்டுகளைத் தீர்த்தது.

ஹெலித் தாக்குதலின் பின்னர் காலை 9 மணியளவில் வல்வைக் கடலோரத்திற்கு வந்த கடற்

[ 2ஆம் பக்கம் பார்க்க ]

## வெருகலில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப், 19

திருக்கோணமலை மாவட்டம் வெருகல் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடந்த சனியன்று தாக்குதல் நடத்தினர்.

கடந்த சனியன்று கல்லாறு, அலிஒலுவ ஆகிய இரு முகாம்களிலிருந்தும் வெளியேறிய படையினர் வெருகல் அணைக்கட்டுப் பகுதியில் முகாம் அமைக்கும் நோக்குடன் தங்கியிருப்பதாகவும்—

இவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ-5]

## நானாட்டானில் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 19

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், கட்டைக்காடு பகுதிகளில் நேற்றும் நேற்று முன்தினமும் பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் நானாட்டான் பகுதியில் இரு பொம்மர்கள் நடத்திய தாக்குதலில்,

[2 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



தண்டிக் கொண்டு வர்றவையளை கண்டனமும் செய்யினம் பிறகு குண்டு வீச

## 2 அதிகாரிகள், 48 படையினர் கொண்டைச்சியில் மரணம்!

### அரசு ஒப்புக் கொள்கின்றது

கொழும்பு, பெப். 19

மன்னயர், கொண்டைச்சியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு அதிகாரிகள் உட்பட 48 படையினர் உயிரிழந்தனர் என்பதை கொழும்பில் இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். இத் தாக்குதலில் எட்டுப் படையினர் படுகாயமடைந்தனர்.

அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய பெரிய தாக்குதல்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாக இத்தாக்குதல் அமைந்தது என்று கொழும்பில் இருந்து பி. பி. ஸிக்கு அதன் செய்தியாளர் கிறிஸ் தோபர் மொரிஸ் அறிவித்திருக்கிறார்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## முதலாண்டு வாழ்த்து

இன்று, செவ்வாய்க்கிழமை, தனது முதலாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் ஈழநாதம் தமிழ் நாளேட்டிற்கு உதயனின் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள் உரியன வாகுக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் Fudo: 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். [சி/5744]

## தவறிவிட்டது

காசிநாதன் மாதற்கரசி, காசிநாதன் சாந்தினி ஆகியோருடைய நிவாரணப் பங்கீட்டு அட்டைகள் [மூன்று] திருநெல்வேலி தேங்காய்ச் சந்தையில் 17-02-91 காலை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். [15873]

## விற்பனைக்கு

எண்ணெய்க் குளியலுக்கு இயற்கை வளம்கொண்டு தயாரித்த ஒலிவ் ஸ்நானப் பவுடர் பக்கெற் ஒன்றின் விலை ரூபா 1.50 மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி/5777]

யாழ். பல்கலைக்கழக லிகிதர், தொழில்நுட்பவியலாளர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி, நுண்ணறிவு I. Q. விலை 56.50 அஸ்ரன் வெளியீடு எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி/5780]

## தவறிவிட்டது

சொக்கலிங்கம் திபகாந்தன் 691090566 V இலக்க அடையாள அட்டை 16-2-91 அன்று அரசடிச் சந்திக்கும், தட்டாதெரு சந்திக்கும் இடையில் கறுப்பு பேசுடன் 1800/- பணமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். க. நம்பையா, 122/15, பருத்தித்துறை வீதி, 4 ஆம் ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [15446]

## லிகிதர் பரீட்சை

யாழ். பல்கலைக்கழக லிகிதர் பரீட்சைக்குரிய பொது உளச்சார்பு நூல் [I.Q] எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது. விலை 50/- ஆக்கியோன் க. குணராசா [M.A] [15852]

## சேவை

நல்ல தரமான நியாய விலையில் மதிய உணவுப் பார்சல் மற்றும் சிற்றுண்டி வகைகள் இலங்கை கனடியன் அபிவிருத்தி நிதி உதவியுடன் உணவு வழங்கும் சேவைத் திட்டத்தின் கீழ் வழங்குகிறோம். தேவையானவர்கள் முன் அறிவித்தல் கொடுத்து சிற்றுண்டிச் சாலையில் பெற்றுக்கொள்ளலாம். சைவவித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி/5774]

## புத்தகங்கள்

வர்த்தகமும், நிதியும் 1 [உயர்தரவகுப்புகளுக்குரியது] ஆக்கம் தே. ஜெயராமன் B. com, M. B. A. [விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்] விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி 5785]

## WANTED

English Short - Hand Typing Teacher call personaly 9 - 00 a.m. To 11 - 00 a.m. Fudo Enterprises 39/17, Power House Road, 3rd. Lane. Jaffna. [Near Jaffna Bus - Stand] [சி-5778]

## சிரமதானம்

யாழ்ப்பாணம், பெப். 19

தாவடிமயானம் சிரமதானம் மூலம் சீரமைக்கப்பட்டு வருகிறது. உடுவில் அண்ணா சனசமூக நிலையத்தினர் இதற்கான பணியை நேற்று ஆரம்பித்தனர். [இ]

## நானாட் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொதுமகன் ஒருவர் பலியானார். வீடு ஒன்று சேதமடைந்தது.

கட்டைக்காடு பகுதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் விமானத் தாக்குதல் இடம் பெற்றது.

ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [எ-5]

## விமான ..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பற்றிய இந்தியப் பிரதிநிதி மௌனம் சாதித்தார். இது குறித்து அவர் வாய் திறக்கவில்லை. ஒரு வார்த்தை தானும் கூறவில்லை.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட கொழும்புக்கான இந்தியத் தூதர் திரு. நாகேந்திரநாத் ஜா, "நாம் வாய் திறக்கவில்லை, பிரச்சினை என்ன என்பது எமக்குத் தெரியும். புரட்சிகளை அடக்க விமானத் தாக்குதல் நடத்துவது சட்டபூர்வமானதே. ஆனால் அத் தாக்குதல் குறிக்கப்பட்ட நோக்கத்துக்காக — திறமையாக — பாவிக்கப்பட வேண்டும்" — என்று கூறினார். [உ-எ]

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991 - 03 - 07 வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**தாவரவியல் / இரசாயனவியல் / விலங்கியல் / பௌதிகவியல் / கணிதமும் / புள்ளிவிவரவியலும்-**

**உதவி விரிவுரையாளர்,**
**சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11**
**சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1**

சம்பள அளவுத் திட்டம்:

1. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1
   ரூபா: 9,600 - 8x250 - 11,600/- மாதமொன்றுக்கு
2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11
   ரூபா: 8,000 - 5x250 - 9,250/- மாதமொன்றுக்கு
3. உதவி விரிவுரையாளர்
   ரூபா: 3, 900/- [நிலையானது] மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1.50 முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச.மீ அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1991 - 02 - 11 [சி5782]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கும் பங்களாதேஷ் நிலை ஏற்படும் என்கிறார் வாசு

கொழும்பு, பெப். 19

பங்களாதேஷ் நாட்டில் நடந்தது போன்று, அரசாங்கத்தின் அனுமதி பெறாது ஆர்ப்பாட்டங்களை பொதுமக்கள் நடத்தும் காலம் விரைவில் இலங்கையிலும் ஏற்படும்.

நவசமசமாஜக் கட்சித் தலைவரும் எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார முன்கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

அன்னையர் முன்னணியினர் இன்று நுகேகொடையில் ஏற்பாடு செய்துள்ள பொதுக் கூட்டம் தொடர்பாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவதற்கு அரசு தடைவிதித்துள்ளது குறித்து கருத்து வெளியிடுகையில் திரு. நாணயக்கரா இவ்வாறு சொன்னார். [உ-எ]

## ஓரிரு தினங்களில் அறிவிப்பு

தமிழ் நாடு சட்டசபைக்கு பொதுத் தேர்தல் நடத்தப்படுவது குறித்து இரண்டொரு தினங்களில் முடிவு செய்யப்படும்.

பிரதமர் சந்திரசேகர் நேற்று இத் தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

## சந்திரசேகரின் அரசை சாடுகின்றார் ராஜீவ்!

இந்திய அரசின் தற்போதைய வெளியுறவுக் கொள்கையை முன்னாள் பிரதமரும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. ராஜீவ் காந்தி கண்டித்தார்.

அணிசேரா இயக்கக் கொள்கையைப் பலவீனப் படுத்துவதாக தற்போதைய வெளியுறவுக் கொள்கை அமைந்திருப்பதாகவும்—

சர்வதேச விவகாரங்களில் இருந்து ஒதுங்கும் கொள்கையை இந்தியா தற்போது கடைப்பிடித்து வருவதாகவும் அவர் சொன்னார்.

இந்திரா காங்கிரஸ் அரசு முன்னர் கடைப்பிடித்து வந்த பொருளாதாரக் கொள்கையை அடியோடு மாற்றி அமைக்கும் முறையில் சந்திரசேகர் அரசின் புதிய பட்ஜட் இருப்பின் அதனை காங்கிரஸ் எதிர்க்கும் என்றும் திரு. காந்தி சொன்னார்.

## ஹெலி, பீரங்கித்....

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

படையினரின் மூன்று பீரங்கிப் படகுகள் கரையோரப் பகுதிகளை நோக்கி, குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இதனால் வல்வைப் பகுதியில் ஏற்கனவே இடம் பெற்ற தாக்குதல்களினால் சேதமுற்ற வீடுகள் மீண்டும் சேதமடைந்தன. [உ-15]

## அச்சுவேலி.....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஷெல்லினால் வகுப்பறைகள், நூல் நிலையம், கலையரங்கம், ஆய்வுகூடம், தொழிற்கூடம் என்பன பலத்த சேதமடைந்தன.

அச்சுவேலி வடக்கு, தெற்கு ஆகிய இடங்களிலும் சில வீடுகள் சேதமடைந்தன.

அச்சுவேலி தோட்டப்பகுதியிலும் இரு ஷெல்கள் விழுந்து வெடித்தன.

வளலாய், இடைக்காடு, தொண்டமனாறு ஆகிய பகுதிகளிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

வளலாய்ப் பகுதியில் ஓர் ஓலைக்குடிசை எரிந்து சாம்பரானது. மற்றும் இரு வீடுகள் சேதமுற்றன.

தொண்டமானாறிலும் ஒரு வீடு சேதமுற்றது. [உ-11-15]

## ஒரே குடும்பத்தில்...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

ஐந்துக்கு மேற்பட்ட வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

ஷெல்லுக்குப் பயந்து, பாதுகாப்புத் தேடி, வியாவில் பாடசாலைக் கட்டடத்துக்குள் ஓடி ஒதுங்கிய ஒரு குடும்பமே பாடசாலையில் விழுந்து வெடித்த ஷெல்லுக்கு இலக்கானது.

அப்பகுதியைச் சேர்ந்த சின்னையா சிவரத்தினம் [வயது 40], அவரது பிள்ளைகளான சந்திரமோகன் [வயது 8], பிரதிபன் [வயது 7], விஜயகாந்த் [வயது 1] ஆகியோரே காயமடைந்தனர்.

இவர்களில் சந்திரமோகனின் வலது கால் துண்டிக்கப்பட்டுள்ளது.

நால்வரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [உ-15]

## இன்னும் 20 இலக்குகள்

ஈராக்கில் இன்னும் 20 இராணுவ இலக்குகளையே பன்னாட்டுப் போர் விமானங்கள் தாக்கி அழிக்க வேண்டியுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்சேனி தெரிவித்தார்.

வான்தாக்குதல்கள் குறிப்பிடத்தக்க பலன்களை அளித்திருப்பதாகவும் அமைச்சர் சேனி சொன்னார்.

## இஸ்ரவேல் மீது 34 ஆவது தாக்குதல்

இஸ்ரவேல் மீது ஈராக் ஞாயிறன்று மீண்டும் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. இதுவரை இஸ்ரவேல் மீது 34 ஸ்கட் ஏவுகணைகள் ஈராக்கினால் ஏவப்பட்டுள்ளன.


புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மாசிமக

## சண்டிகாஹோமமும் இலட்சார்ச்சனையும்

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நிகழும் பிரமோதூத ஆண்டு மாசித் திங்கள் 7 ஆம் நாள் [19-2-91] செவ்வாய்க் கிழமை முதல் 16 ஆம் நாள் [28-2-91] வியாழக்கிழமை வரை தினமும் சண்டிகாஹோமம், அபிஷேகம், விசேட பூசை, இலட்சார்ச்சனை, தேவி மகாத்மிய பாராயணம், ஸ்ரீ சக்கர யந்திரபூசை, ஜெபம், தருப்பணம், திருமுறை, அபிராமி அந்தாதி ஓதுதல் ஆகியன தொடர்ந்து நடைபெறும். மாசிமக ஊர்வலம் வழமைபோல் நடைபெறும்.

[பூர்த்திநாளன்று பூரணாகுதிப் பொருள்கள் வழங்கப்படும்]

ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய
பரிபாலன சபை.

புங்குடுதீவு - 3
2-2-1991. [15874]



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

## Services of Translators

Services of other officers or persons outside the public Service who are competent to do official translations in the following, are required by the University of Jaffna:

English to Tamil
English to Sinhala
Sinhala to Tamil

Payment will be made on a piece rate basis. Rates applicable for translations are as follows:

Non technical translations -
Rs. 15/- per 360 words

Technical translations -
Rs. 30/- per 360 words

Where the number of words in a translation is less than 360, payment may be made on a pro rata basis.

Those who interested are requested to contact the Registrar, University of Jaffna, Thirunelvely. The closing date for the above is 1991-03-15.

REGISTRAR

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991 - 02 - 13 (C-5783)


உதயன்

## சபலம் ஆகாது!

வடக்கு-கிழக்கில் மேலும் பல பகுதிகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி திரு. பிரேமதாஸ படையினருக்குக் காலக்கெடு விதித்திருக்கிறாராம்.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்த ஜனவரியில், அரசு ஒரு வாரம் மட்டும் தாக்குதல்களை நிறுத்திவிட்டு, அதன்பின் யுத்த நிறுத்தத்தை ஏற்க மறுத்து இராணுவ நடவடிக்கைகளை மீண்டும் தீவிரப்படுத்தத் தொடங்கியது.

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதிக்கும் சில அமைச்சர்களுக்கும் இருந்தது என்பதும், யுத்த நிறுத்தத்தை முறித்துவிட வேண்டும் என்பதில் இராணுவமும், மகாசங்கமும் கூட்டாக இயங்கி அதற்கான பின்னணியை உருவாக்கின என்பதும் ஏற்கனவே தெரிந்த பழைய சங்கதிகள்.

யுத்த நிறுத்த முறிவுக்குச் சம்மதம் தெரிவித்த வேளை, வடக்கு - கிழக்கில் முன்னேறிக் காட்டுவதற்கு இராணுவத்தினருக்கு ஜனாதிபதி காலக்கெடு கொடுத்திருந்தார் என்ற தகவல் இப்போது வெளியாகி இருக்கிறது. எனினும் ஜனாதிபதி விதித்த காலக்கெடு எப்போது முடிவடைகிறது என்பது தெரியாத விடயமாக உள்ளது.

''யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை ஆறு மாத காலத்திற்குள் பூண்டோடு அழித்துவிட்டு வருக!'' என்று அப்போதைய பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, தமது மருகரான பிரிகேடியர் வீரதுங்காவுக்கு வீராவேசத்துடன் உத்தரவு விதித்ததை, காலக்கெடு வழங்கியதை இலங்கையர்கள் இலகுவில் மறந்திருக்க முடியாது.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குப் பயங்கரவாதம் என்று பட்டங்கட்டி, வீராவேசம் கொண்ட ஜே. ஆரினால், தமிழர்களின் எழுச்சியை அடக்க முடியாமற் போனது ஒரு புறமிருக்க, அவர்களின் சுதந்திர உணர்வை, உரிமை பெற்றிட வேண்டும் என்ற வைராக்கியத்தை மட்டுமே மேலும் வளர்க்க முடிந்தது.

இறுதியில் எதுவுமே செய்ய முடியாதவராக, தமிழர்களின் எழுச்சிக்கு முகம் கொடுக்க இயலாத பலவீனராகி, இந்தியாவின் காலில் விழுந்து, நாட்டின் இறைமையையே அடகு வைத்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய கேவல நிலையை அடைந்தார். ''போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்'' என்று இரத்தம் கொதியுண்டவர் பின்னர் அடங்கலானார்.

எனினும் இனப்பிரச்சினை தீரவும் இல்லை; தமிழர் உரிமைகள் வழங்கப்படவும் இல்லை; அவர்களின் உரிமை உணர்வும், எழுச்சியும் அடங்கிவிடவும் இல்லை.

அவரின் சீடப்பிள்ளையான இன்றைய ஜனாதிபதி, தமது குரு இழைத்த அதே தவறான வழியை நாடுகிறார். தமக்கு மறுக்கப்பட்டிருக்கும் உரிமைகளைப் பெறவேண்டும் என்ற இலட்சியமே தமது உடலும் உணர்வுமாகிவிட்ட தமிழர்களின் பிரச்சினையை, இராணுவ பலத்தினால் தீர்த்துவிடலாம் என்று தப்புக்கணக்குப் போடுகிறார். தமக்கு முந்தியவர் தவறிழைத்த அனுபவம் தெரிந்து கொண்டும், அடிமை விலங்கை உடைத்தெறியும் தமிழர்களின் திடசங்கற்பத்தை இராணுவ பலத்தால் குலைத்துவிட முடியாதா என்ற சபலத்துக்கு ஆளாகிறார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விரும்புவதாகக் கூறிக்கொண்டு இராணுவத் தீர்வையும் பரீட்சித்துப் பார்த்தால் என்ன என்று மனம் அலைகலக்கிறார். தமிழர் பிரச்சினையைத் தீர்த்தவர் என்ற சரித்திர நாயகனாக வரவிரும்பின், அவர் இராணுவத்துக்கு காலக்கெடு கொடுத்து காலத்தை வீணாக்கக் கூடாது. அரசியல் தீர்வு ஒன்றை வகுத்து அதில் இருக்கக்கூடிய குறைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் களைந்து தமிழர்களின் உரிமைகளை வழங்க வேண்டும்.

# கடற்படையின் ...

# தீவுப்பகுதிப் பய...

நெடுந்தீவு, பெப். 19

நெடுந்தீவு குறிகாட்டுவான் பயணிகள் படகும் அங்கிருந்து வரும் இதர படகுகளும் நயினாதீவு முகாமில் வைத்துக் கடற்படையினரின் கடும் சோதனைக்கு உள்ளாகின்றன. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை அடைகின்றனர். பலர் அச்சத்துடனேயே பயணம் செய்கின்றனர்.

சமீபத்தில் பயணிகள் படகு ஒன்றில் இருந்து டோர்ச் பற்றறிகள் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதற்குத் தண்டனையாக பயணிகள் நான்கு மணிநேரம் வரை முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

அத்துடன் நயினாதீவு ...

## அரிசிக்குப் பதில் நெல்

தாளையடி, பெப். 19

வடமராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரிசிக்குப் பதிலாக நெல்லை மக்களுக்கு விநியோகித்து வருகிறது.

ஐந்தாம் கட்ட உணவு முத்திரைக்கே அதன் பெறுமதிக்கேற்ப ஒவ்வொரு குடும்பத்துக்கும் நெல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

[இ-144]

# கற்குவியல் மத்தி...

[முந்திய தொடர்ச்சி]

அந்தக் குண்டின் ஓசை, செவிப்பறைகளைத் தகர்ப்பது போல் இருந்தது! கோயில் உட்சுற்றுப் பிரகாரம் எங்கும் ஒரே புகை மண்டலமாக இருந்தது!

வெடி மருந்துகளின் நாற்றத்தினால் குழந்தைகளும், பெண்களும் அலறத் தொடங்கி விட்டனர்.

ஆம்:... சுகந்தம் வீசும் அகில் புகையும், கற்பூர வாசனையும் கமகமக்கும் அந்த ஆலயத்தினுள் வெடிமருந்துப் புகையும், கந்தக நாற்றமும் மூக்கைத் துளைத்துக் கொண்

வல்வைப் புயல்
பகுதி: ஐந்து

டிருந்தன! இந்தச்சம்பவத்தில் நேரடியாகவே பாதிக்கப்பட்டு அனுபவித்த நல்லையா சரஸ்வதி என்பவர் சொன்னார்:

### கெதியிலை உனக்கு அழிவு வரும்

''பொம்மர்களைக் கண்டவுடனை நாங்கள் கொஞ்சப் பேர் ஓடிவந்து இதுக்குள்ளை பதுங்கிவிட்டம்... கோபுர வாசலின் கீழ் செல்வேந்திரா அண்ணையும், மணியண்ணாவும், பிரேம்குமாரும், இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சபலம் ஆகாது!

வடக்கு-கிழக்கில் மேலும் பல பகுதிகளை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி திரு. பிரேமதாஸ படையினருக்குக் காலக்கெடு விதித்திருக்கிறாராம்.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்த ஜனவரியில், அரசு ஒரு வாரம் மட்டும் தாக்குதல்களை நிறுத்திவிட்டு, அதன்பின் யுத்த நிறுத்தத்தை ஏற்க மறுத்து இராணுவ நடவடிக்கைகளை மீண்டும் தீவிரப்படுத்தத் தொடங்கியது.

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதிக்கும் சில அமைச்சர்களுக்கும் இருந்தது என்பதும், யுத்த நிறுத்தத்தை முறித்து விட வேண்டும் என்பதில் இராணுவமும், மகாசங்கமும் கூட்டாக இயங்கி அதற்கான பின்னணியை உருவாக்கின என்பதும் ஏற்கனவே தெரிந்த பழைய சங்கதிகள்.

யுத்த நிறுத்த முறிவுக்குச் சம்மதம் தெரிவித்த வேளை, வடக்கு - கிழக்கில் முன்னேறிக் காட்டுவதற்கு இராணுவத்தினருக்கு ஜனாதிபதி காலக்கெடு கொடுத்திருந்தார் என்ற தகவல் இப்போது வெளியாகி இருக்கிறது. எனினும் ஜனாதிபதி விதித்த காலக்கெடு எப்போது முடிவடைகிறது என்பது தெரியாத விடயமாக உள்ளது.

''யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை ஆறு மாத காலத்திற்குள் பூண்டோடு அழித்துவிட்டு வருக!'' என்று அப்போதைய பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, தமது மருகரான பிரிகேடியர் வீரத்துங்காவுக்கு வீராவேசத்துடன் உத்தரவு விதித்ததை, காலக்கெடு வழங்கியதை இலங்கையர்கள் இலகுவில் மறந்திருக்க முடியாது.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குப் பயங்கரவாதம் என்று பட்டங்கட்டி, வீராவேசம் கொண்ட ஜே. ஆரினால், தமிழர்களின் எழுச்சியை அடக்க முடியாமற் போனது ஒரு புறமிருக்க, அவர்களின் சுதந்திர உணர்வை, உரிமை பெற்றிட வேண்டும் என்ற வைராக்கியத்தை மட்டுமே மேலும் வளர்க்க முடிந்தது.

இறுதியில் எதுவுமே செய்ய முடியாதவராக, தமிழர்களின் எழுச்சிக்கு முகம் கொடுக்க இயலாத பலவீனராகி, இந்தியாவின் காலில் விழுந்து, நாட்டின் இறைமையையே அடகு வைத்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய கேவல நிலையை அடைந்தார். ''போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்'' என்று இரத்தம் கொதியுண்டவர் பின்னர் அடங்கலானார்.

எனினும் இனப்பிரச்சினை தீரவும் இல்லை; தமிழர் உரிமைகள் வழங்கப்படவும் இல்லை; அவர்களின் உரிமை உணர்வும், எழுச்சியும் அடங்கிவிடவும் இல்லை.

அவரின் சீடப்பிள்ளையான இன்றைய ஜனாதிபதி, தமது குரு இழைத்த அதே தவறான வழியை நாடுகிறார். தமக்கு மறுக்கப்பட்டிருக்கும் உரிமைகளைப் பெறவேண்டும் என்ற இலட்சியமே தமது உடலும் உணர்வுமாகிவிட்ட தமிழர்களின் பிரச்சினையை, இராணுவ பலத்தினால் தீர்த்துவிடலாம் என்று தப்புக்கணக்குப் போடுகிறார். தமக்கு முந்தியவர் தவறிழைத்த அனுபவம் தெரிந்துகொண்டும், அடிமை விலங்கை உடைத்தெறியும் தமிழர்களின் திடசங்கற்பத்தை இராணுவ பலத்தால் குலைத்துவிட முடியாதா என்ற சபலத்துக்கு ஆளாகிறார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விரும்புவதாகக் கூறிக்கொண்டு இராணுவத் தீர்வையும் பரீட்சித்துப் பார்த்தால் என்ன என்று மனம் அலைகலக்கிறார். தமிழர் பிரச்சினையைத் தீர்த்தவர் என்ற சரித்திர நாயகனாக வரவிரும்பின், அவர் இராணுவத்துக்கு காலக்கெடு கொடுத்து காலத்தை வீணாக்கக் கூடாது. அரசியல் தீர்வு ஒன்றை வகுத்து அதில் இருக்கக்கூடிய குறைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் களைந்து தமிழர்களின் உரிமைகளை வழங்க வேண்டும்.

# கடற்படையின் நெடுரிடி அதிகரிப்பு

## தீவுப்பகுதிப் பயணிகள் அச்சம்

நெடுந்தீவு, பெப். 19

நெடுந்தீவு குறிகாட்டுவான் பயணிகள் படகும் அங்கிருந்து வரும் இதர படகுகளும் நயினாதீவு முகாமில் வைத்துக் கடற்படையினரின் கடும் சோதனைக்கு உள்ளாகின்றன. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை அடைகின்றனர். பலர் அச்சத்துடனேயே பயணம் செய்கின்றனர்.

சமீபத்தில் பயணிகள் படகு ஒன்றில் இருந்து டோர்ச் பற்றறிகள் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதற்குத் தண்டனையாக பயணிகள் நான்கு மணிநேரம் வரை முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

அத்துடன் நயினாதீவு முகாமில் தினசரி சோதனையுடன் அடிக்கடி கடற்படையினரின் நடுக்கடல் சோதனைகளுக்கும் பயணிகள் உட்படுத்தப்படுகின்றனர்.

வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே பிரயாணம் செய்யும் மக்கள், தமக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்ல முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

[இ-111]

## அரிசிக்குப் பதில் நெல்

தாளையடி, பெப். 19

வடமராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரிசிக்குப் பதிலாக நெல்லை மக்களுக்கு விநியோகித்து வருகிறது.

ஐந்தாம் கட்ட உணவு முத்திரைக்கே அதன் பெறுமதிக்கேற்ப ஒவ்வொரு குடும்பத்துக்கும் நெல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

[இ-144]

## யாழ்: பல்கலைக்கழகத்தில் தமிழியல் ஆய்வரங்குகள்

யாழ்ப்பாணம், பெப். 19

தமிழியல் ஆய்வினை ஊக்குவிக்கும் பொருட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மாதந்தோறும் இரண்டு ஆய்வரங்குகளை நடத்த உள்ளது.

பல்கலைக்கழக தமிழ்த்துறை ஏற்பாடு செய்துள்ள ஆய்வரங்குகள் மாதத்தின் இரண்டாவது, நான்காவது வாரங்களில் வரும் புதன் கிழமைகளில் நடைபெறும்.

இதன் அடிப்படையில், முதலாவது ஆய்வரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியற்கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும். ''ஈழத்திலெழுந்த தமிழ்மருத்துவ நூல்களில் பரராசசேகரத்தின் முக்கியத்துவம்'' என்ற தலைப்பில் ஆய்வு நடைபெறும்.

தமிழியல் பற்றிய ஆய்வுகளை ஊக்குவிப்பதுடன், அவ்வாறான ஆய்வுகளை வெளிக்கொணருதல், தமிழியலில் ஆர்வம் கொண்ட மாணவர்களை அத்துறையில் நெறிப்படுத்துதல் ஆகிய முக்கிய நோக்கங்களுக்காக ஆய்வரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரம் தெரிவித்தார்.

இந்த ஆய்வரங்குகளில் தமிழார்வம் உள்ளவர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம் எனவும் அதற்கு விரும்புவோர் தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் அவர்களும் அழைக்கப்படுவர் என்றும் தமிழ்த்துறைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

[அ]

# கற்குவியல் மத்தியில் சண்டேஸ்வரி!

[முந்திய தொடர்ச்சி]

அந்தக் குண்டின் ஓசை, செவிப்பறைகளைத் தகர்ப்பது போல் இருந்தது! கோயில் உட்சுற்றுப் பிரகாரம் எங்கும் ஒரே புகை மண்டலமாக இருந்தது!

வெடி மருந்துகளின் நாற்றத்தினால் குழந்தைகளும், பெண்களும் அலறத் தொடங்கி விட்டனர்.

ஆம்:... சுகந்தம் வீசும் அகில் புகையும், கற்பூர வாசனையும் கமகமக்கும் அந்த ஆலயத்தினுள் வெடிமருந்துப் புகையும், கந்தக நாற்றமும் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தன! இந்தச்சம்பவத்தில் நேரடியாகவே பாதிக்கப்பட்டு அனுபவித்த நல்லையா சரஸ்வதி என்பவர் சொன்னார்:

வல்லைப் புயல்

பகுதி: ஐந்து

### கெதியிலை உவைக்கு அழிவு வரும்

''பொம்மர்களைக் கண்டவுடனை நாங்கள் கொஞ்சப் பேர் ஓடிவந்து இதுக்குள்ளை பதுங்கிவிட்டம்... கோபுர வாசலின் கீழ் செல்வேந்திரா அண்ணையும், மணியண்ணாவும், பிரேம்குமாரும், இன்னும் ஓர் ஆளும் நின்றவர்கள், பின்னையாம் வாசலில் குண்டு வீழ்ந்தவுடனை. அதுக்கு மேலும் நாங்கள் அங்கே நிற்கப் பயந்து வெளியே ஓடிவிட்டம்... கடவுளே!... எங்கடை அம்மாளாச்சிக்கே இந்தக் கதியென்றால்... ஆனால் அவ, இந்தப் படுகொலைகாரரைச் சும்மா விடமாட்டா... எங்களை எல்லாம் இந்தக் குண்டுக்குள்ளாலை காத்த கிழவி சும்மா இருப்பா என்று நினைக்கிறியளோ... கெதியிலை அவங்களுக்கு உந்தச் சிங்களவருக்கு ஒரு அழிவு வராவிட்டால் பாருங்கோ... மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கூறிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணின் அந்த உறுதியான நம்பிக்கை என்னை மெய்சிலிர்க்க வைத்துவிட்டது.

1986இல் பெருமை வாய்ந்த செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் பல லட்சக்கணக்கான ரூபா செலவில் அமைத்திருந்த பிரமாண்டமான அழகிய சித்திரத்தேரை தொண்டமனாறு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எரித்துச் சாம்பராக்கினர்!

விளைவு! அந்த எரிப்பில் பங்கு பற்றிய அத்தனை காடையர்களும் இன்று உயிரோடு இல்லை! அதோடு அப்போதைய தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் கூட, நாடாளுமன்றத்தில் பட்டபாடு......

எங்கள் ஆலயங்களில் இருப்பவை வெறும் கற்சிலைகள் தான்!...... ஆனால் அவற்றின் சக்தியும், மகத்துவமும் இந்த உலகையே, அண்ட சராசரத்தையே ஆட்டிப் படைக்கும் வல்லமை பெற்றவை என்பதை பௌத்த பேரினவாதம் இன்னும் உணரவில்லை.

தொடர்ந்து அடுத்தடுத்து மூன்று நாட்களிலும், கோயிலின் மேலும், கோயில் வீதிகளிலும் சுமார் 20 குண்டுகள் வீசப்பட்டன. சண்டேஸ்வரி ஆலயத்தின் மேல் ஒரு பாரிய குண்டு விழுந்து அதன் முழுப்பகுதியுமே உடைந்து கற்குவியல் போல் தோற்றமளித்தது. அந்தக் குவியலில் இருந்து சண்டேஸ்வரி விக்கிரகத்தின் தலை தெரிந்தது!

வல்லை

ந. அனந்தராஜ்

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுள்வேத வைத்தியசாலையில் முறிவு-நெரிவு விஷகடி சிகிச்சை

கொழும்புத்துறை, பெப். 19

கைதடி ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் விசேட வைத்திய சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது முறிவு-நெரிவு சிகிச்சையும், விஷக்கடிக்கான சிகிச்சையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முறிவு-நெரிவு சிகிச்சை செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் விஷகடி வைத்திய சிகிச்சை திங்கள், வியாழக்கிழமைகளிலும் நடைபெறுகின்றன.

முறிவு-நெரிவு சிகிச்சைக்கு நாயன்மார்க்கட்டுசித்தவைத்தியர் டாக்டர் இ. உமாகாந்தனும், விஷகடிக்கு கொடிகாமம் சேர்ந்த விஷவைத்திய சிந்தாமணி டாக்டர் க. சிற்றம்பலமும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ம. தவத்துரை தெரிவித்தார்.

[இ-30]

## இடத்துக்கிடம் வேறுபடும் பாண் விலை

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பாணின் விலை இடத்துக்கிடம் வேறுபடுகிறது.

எட்டு ரூபா முதல் பன்னிரண்டு ரூபா வரை தற்போது பாண் விற்கப்பட்டு வருகிறது.

பாணின் நிறையும், நாமும் இடத்துக்கிடம் வேறுடுகின்றன.

[இ-6]

## பயிலுநர் ஆசிரியருக்கும் 300 ரூபா சம்பள உயர்வு

யாழ். மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கும் 300 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு கொடுப்பனவை இவர்களுக்கும் வழங்கும்படி கல்வியமைச்சு பணித்துள்ளது.

[உ-3]


# வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

# "ஷப்றா"

## உங்கள் நிதி வளத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்.

நிலையான வைப்பு

| காலம் - மாதம் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதி நிலை விவரம்

| | 1986/87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11, 342, 354 | 14, 354, 927 | 23, 306, 910 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100, 577, 492 | 110, 897, 760 | 116, 890, 354 |
| வங்கிக் கடன்கள் | 7, 718, 284 | 6, 539, 639 | 11, 364, 064 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16, 613, 250 | 14, 832, 400 | 13, 700, 000 |
| வங்கி மீதிகள் | 10, 911, 712 | 3, 189, 084 | 1, 894, 245 |
| மொத்தச் சொத்துகள் | 127, 175, 677 | 143, 822, 862 | 162, 239, 787 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19, 310, 887 | 23, 173, 830 | 23, 700, 680 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16, 880, 875 | 20, 025, 480 | 20, 833, 024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2, 330, 012 | 3, 148, 350 | 2, 867, 656 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1, 775, 100 | 1, 508, 110 |

1988ஆம் ஆண்டு 78ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.
பதிவு இல. NBS / R/90/021

பணிப்பாளர் சபை

எஸ். பி. சீ. கருணாரட்ண
சட்டத்தரணி, சமாதான நீதிவான். (தலைவர்)
எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
ஜே. டி. நவரட்ணம்,
A. I. B. (Lond.), பொதுமுகாமையாளர்
ஏ. எம். எச். பரி.
B. A. (Hons.)
ஆர். பாலசுப்பிரமணியம்.

மேலதிக விவரங்களைப் பெற

## ஷப்றா

## யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

61, நியூ புல்லர்ஸ்வீதி, கொழும்பு - 4
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## நூற்றாண்டு விழா

நாகலிங்கம் நினைவுச் சொற்பொழிவு

நேரம் : முற்பகல் 10-00 மணி
காலம் : 21 - 2 - 91 வியாழக்கிழமை
இடம் : குமாரசாமி மண்டபம்

யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரம்
— புதிய நோக்கு

இரு. க. புஸ்பரத்தினம்
சிரேட்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ. மகேந்திரன்
செயலர், விழாக்குழு

க. குகதாசன்
அதிபர் - தலைவர்,
நூற்றாண்டு விழாச்சபை.

[சி/5786]



31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## ந. இரஞ்சித் கணேசகுமார்

(Excise Inspector, Jaffna)
(யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன்)

தோற்றம்: 21 - 10 - 1960
மறைவு: 21 - 01 - 1991

எங்கள் உள்ளத்தை என்றும் விட்டு நீங்காத எமது அருமை மகனே — கணவனே!

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்போம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகள் எதிர்வரும் புதன்கிழமை [20 - 02 - 91] காலை 10 மணியளவில் பருத்தித்துறை வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்ச்சிகளில் கலந்து மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக் கொள்கிறோம். தற்போதைய சூழ்நிலையில் தனிப்பட ஒவ்வொருவருக்கும் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

இங்ஙனம்:
த. நடராசா,
இளைப்பாறிய அதிபர் அவர்களும்,
குடும்பத்தினரும்.

தங்கஸ்தான்,
கோப்பாய்.

[15870]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ாலையில் ...சிகிச்சை

...லும் நடைபெ...

...நரிவு சிகிச்சைக்கு ...க்கட்டுசித்தலை ...ர் இ. உமாகாந் ...ஷகடிக்கு கொட ...சர்ந்த விஷவைத் ...மணி டாக்டர் ...வரும் நியமிக்கப் ...ர்கள் என வைத் ... பொறுப்பதிகாரி ...ருமதி ம. தவத் ...வித்தார்.

[இ-30]

## இடத்துக்கிடம் வேறுபடும் பாண் விலை

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பாணின் விலை இடத்துக்கிடம் வேறுபடுகிறது.

எட்டு ரூபா முதல் பன்னிரண்டு ரூபா வரை தற்போது பாண் விற்கப்பட்டு வருகிறது.

பாணின் நிறையும், தரமும் இடத்துக்கிடம் வேறுடுகின்றன.

[இ-6]

## பயிலுநர் ஆசிரியருக்கும் 300 ரூபா சம்பள உயர்வு

யாழ். மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கும் 300 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு கொடுப்பனவை இவர்களுக்கும் வழங்கும்படி கல்வியமைச்சு பணித்துள்ளது.

[உ-3]


...ழ்விற்கு ...தார் வழிகாட்டி

...ப்றா"

...ளத்தைப் பெருக்க ...ட்டங்களை நாடுங்கள்.

...ன வைப்பு

| ...தாந்தம் | முதிர்ச்சியில் |
| --- | --- |
| — | 17% |
| — | 18% |
| 18% | 20% |
| 21% | 23% |
| 22% | 24% |

...ருக்கான நிதி நிலை விவரம்

| 1986/87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
| --- | --- | --- |
| ...342, 354 | 14, 354, 927 | 23, 306, 910 |
| ...577, 492 | 110, 897, 760 | 116, 890, 354 |
| ...718, 284 | 6. 539, 639 | 11, 364, 064 |
| ...613, 250 | 14. 832, 400 | 13, 700, 000 |
| ...911, 712 | 3, 189 084 | 1, 894, 245 |
| ...175, 677 | 143, 822, 862 | 162, 239, 787 |
| ...310, 887 | 23, 173, 830 | 23, 700, 680 |
| ...880, 875 | 20, 025, 480 | 20, 833, 024 |
| ...330, 012 | 3, 148, 350 | 2. 867, 656 |
| — | 1, 775, 100 | 1, 508, 110 |

பணிப்பாளர் சபை

...எஸ். பி. ஈ. கருணாரட்ண
சட்டத்தரணி, சமாதான நீதிவான். (தலைவர்)
...எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முன்மைப் பணிப்பாளர்
...ஜே. டி. நவரட்ணம்,
A. I. B. (Lond.), பொதுமுகாமையாளர்
... எம். எச். பாரி.
B. A. (Hons.)
...ஆர். பாலசுப்பிரமணியம்.

...ஷப்றா
...ினான்ஸ் லிமிட்டெட்,
..., 207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## நூற்றாண்டு விழா

நாகலிங்கம் நினைவுச் சொற்பொழிவு

நேரம் : முற்பகல் 10-00 மணி
காலம் : 21 - 2 - 91 வியாழக்கிழமை
இடம் : குமாரசாமி மண்டபம்

யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரம் — புதிய நோக்கு

திரு. க. புஸ்பரத்தினம்
சிரேட்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ. மகேந்திரன் — செயலர், விழாக்குழு
க. குகதாசன் — அதிபர் - தலைவர், நூற்றாண்டு விழாச்சபை.

[சி/5786]

31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### ந. இரஞ்சித் கணேசகுமார்

[Excise Inspector, Jaffna]
[யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன்]

தோற்றம்: 21 - 10 - 1960 மறைவு: 21 - 01 - 1991

எங்கள் உள்ளத்தை என்றும் விட்டு நீங்காத எமது அருமை மகனே — கணவனே!

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்போம்.


அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகள் எதிர்வரும் புதன்கிழமை [20 - 02 - 91] காலை 10 மணியளவில் பருத்தித்துறை வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் கலந்து மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக் கொள்கிறோம். தற்போதைய சூழ்நிலையில் தனிப்பட ஒவ்வொருவருக்கும் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

இங்ஙனம்:
த. நடராசா,
இளைப்பாறிய அதிபர் அவர்களும்,
குடும்பத்தினரும்.

தங்கள்தான்,
கோப்பாய்.

[15870]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### கருணானந்தன் - சந்திரமௌலி

(B. Sc. Hons. Electronics Engineer M. Sc.)

அன்னையின் அரவணைப்பில்: 02-02-1959
பேரானந்தப் பெருவெளியில்: 19-02-1990

மாற்றறியாத செழும் பசும் பொன்னே
மாசற்ற சோதியே
நந்தா விளக்கனைய எம் நாயகனே

வெளிநாடு சென்று பட்டங்கள் பல பெற்று பிறந்த மண்ணை நாடிவந்து திட்டங்கள் பல தீட்டி நம் நாட்டை பொன்னாடாக்கப் பணிபுரிந்தாய். உன் இலட்சியத்தையும், தூய உள்ளத்தையும், உணராமல் உன்னைப் பித்தன் எனவும் வஞ்சகன் எனவும் மன வேதனைப்படுத்தினர். ஆற்றாமையால் தலைநகரம் சென்று தகைமையுடன் பதவியேற்று ஓராண்டு காலம் இல்லறம் நல்லறமாக நடத்திப் பெற்றோருக்குப் பெருமையீட்டி உற்றார், உறவினர்க்கு உறுதுணையாய் இருக்குங்கால் பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் சர்துன்னை ஆட்கொண்டு கணையா உடலோடு தன் பாத கமலங்களிடம் சேர்ப்பித்தானோ? துருவ நட்சத்திரம் போல் எங்களை வழி நடத்து, எங்கள் அன்புத் தெய்வமே.

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, மனைவி, அக்கா,
அத்தான், தம்பி, மச்சாள், தங்கை,
சித்தப்பா, சின்னம்மா, மாமா, மாமி,
உற்றார், உறவினர்கள்.

26, சிவகுருநாதர் வீதி, யாழ். [சி-5781]

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் நல்லம்மா

இலகடி சங்கானையைச் சேர்ந்த திருமதி வல்லிபுரம் நல்லம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அருமை மகளும், மூத்தம்மா, பராசக்தி ஆகியோரின் சகோதரியும், நாகேஸ்வரன் [மக்கள் வங்கி, யாழ். பிராந்தியக் காரியாலயம்], சத்தியநேசன், கேதீஸ்வரன் [பிரான்ஸ்], சுமந்தினி ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

ஈமக்கிரியைகள் 19-02-1991 செவ்வாய் [இன்று] காலை 9-30 மணியளவில் சங்கானையில் நடைபெறும்.

தகவல்:
நா. நாகேஸ்வரன்

[15450]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முடிவுக்கு ஈராக் ஆட்சேபம்!

கொழும்பு, பெப்.19

பன்னாட்டுப் போர் விமானங்கள் மற்றும் போர்க் கப்பல்களுக்கு எரிபொருள் வசதி வழங்க அனுமதி அளிப்பது என்ற இலங்கை அரசின் முடிவுக்கு ஈராக் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

ஆயுதங்களுடன் கூடிய போர் விமானங்கள் இவ்வசதியை பயன்படுத்தியிருப்பதாக கொழும்பில் உள்ள ஈராக் தூதரக பொறுப்பதிகாரி அமர்நஜி சொன்னார்.

இலங்கை அரசின் முடிவு அணிசேரா இயக்கக் கொள்கைக்கு முரணானது என்றும்—

இது விஷயத்தில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா விடுத்த அறிக்கை நியாயமானது என்றும் அவர் மேலும் சொன்னார். [உ-எ]

# வளைகுடாப் பிரச்சினை; ரஷ்யா சமரச யோசனை

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நேற்று புதிய சமரச யோசனை ஒன்றை வெளியிட்டார்.

மாஸ்கோ வந்திருக்கும் ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸுடன் நேற்று அவர் மூன்றரை மணித்தியாலங்களாக நடத்திய பேச்சுக்களின்போது இப்புதிய யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

புதிய யோசனைகளில் உள்ள விவரங்களை நேற்று திரு. கோர்பச்சேவ் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கும் அறிவித்தார்.

புதிய யோசனை பற்றி ஜனாதிபதி சத்தாம் ஹுசேனுடன் ஆராய்ந்து முடிவுக்கு வர, ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் உடனடியாக மாஸ்கோவில் இருந்து பக்தாத் நோக்கிப் புறப்பட்டார். ஜனாப் அஸீஸ் ஜனாதிபதி சத்தாமின் பதிலுடன் மாஸ்கோவுக்கு இன்று திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கிடையில் சமரச யோசனையை ஈராக்கிய தூதுக் குழு அக்கறையுடனும் புரிந்துணர்வுடனும் வரவேற்றதாக அறிவிக்கப்படுகிறது.

ஈராக் வெளியுறவு அமைச்சருடன் தாம் நடத்திய பேச்சுக்கள்பற்றி சோவியத் நாடாளு மன்றத்துக்கு திரு. கோர்பச்சேவ் நேற்று விளக்கமளிக்க இருந்தார்.

# பாலைவனப் புயலுக்கு புழுதிப் புயல் தடை!

ஈராக் மீது பன்னாட்டுப் படைகள் உடனடியாகத் தரைத் தாக்குதலை நடத்த முடியாது என்று இராணுவ நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

இயற்கையே அதற்கு எதிராக முட்டுக்கட்டை போடும் என்பதே அவர்கள் கூறும் காரணமாகும்.

சவூதியையும் குவைத்தையும் அண்டியுள்ள பாலைவனப் பிரதேசத்தில் இப்போது பெரும் புழுதிப்புயல் ஆரம்பமாகியுள்ளது. இது இன்னும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் என வானிலை அவதானிகள் கணக்கிட்டுள்ளனர்.

புழுதிப் புயல் பன்னாட்டுப் படை வீரர்களின் கண்களை மட்டுமல்ல அவர்களின் துப்பாக்கிகள், கூடாரங்களையும் நிறைக்கின்றன: ஹெலிகளும், விமானங்களும் இலக்குகளை கண்டறிய முடியாதவாறு மறைக்கின்றன — என்று இராணுவ நிபுணர்கள் சொன்னார்கள்.

ஆகையால் அமெரிக்காவின் "பாலைவனப்புயல்" இராணுவ நடவடிக்கையை புழுதிப்புயல் கீழே அமுக்கிவிடும் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்! [அ]

# அமெரிக்க போர்க்கப்பல் கண்ணியில் சிக்கியது!

வளைகுடாவின் வடபகுதி கடலில் அமெரிக்காவின் இரண்டு போர்க் கப்பல்கள் கடற்கண்ணிகளில் சிக்கிக்கொண்டன என்று பன்னாட்டுப் படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

திரிப்ஸாலி, பிரின்ஸ்டன் ஆகிய போர்க்கப்பல்கள் சேதமடைந்தவை ஆகும். ஆட்சேதம் பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

வளைகுடாப் போர் ஆரம்பமான பின்னர் ஈராக்கின் கடற் கண்ணிகளுக்கு அமெரிக்க போர்க்கப்பல்கள் இலக்கானது இதுவே முதல் தடவையாகும் [illegible] கூறப்படுகிறது.

# தெற்கு அன்னையர் போராட்டம்; விடுதலைப் புலிகளும் ஆதரவு

கொழும்பு, பெப். 19

தென்னிலங்கை அன்னையர் முன்னணியின் பிரமாண்டமான பொதுக்கூட்டம் இன்று நுகேகொடையில் நடைபெற உள்ளது.

இப் பொதுக்கூட்டத்தை முன்னிட்டு நடைபெற இருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை அரசாங்கம் தடை செய்துள்ளது தெரிந்ததே.

இந்தப் பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தச் சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை —

அன்னையர் முன்னணியின் போராட்டத்துக்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க விடுதலைப் புலிகள் முன்வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசு மனித உரிமைகளுக்கு எதிராக நடத்திய கொடூரங்களைக் கண்டித்து அன்னையர் முன்னணியினர் எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லண்டன் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை கூறுவதாக ஏஜன்சிச் செய்தி தெரிவித்தது. [அ எ]

# லண்டனில் குண்டு!

லண்டன் மாநகரின் மத்தியில் உள்ள இரண்டு ரயில் நிலையங்களில் நேற்று குண்டுகள் வெடித்தன. அதில் ஒருவர் உயிரிழந்தார். 40 பேர் காயமடைந்தனர்.

ஐரிஷ் விடுதலை இராணுவத்தினரே இந்த நாசவேலைக்குக் காரணம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# தாகத்துக்கு கிறைப்வாட்டர் கைகொடுத்தது

கொக்குவில், பெப்.18

காட்டுக்குள் சிக்கியவருக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியில் "கிறைப்வாட்டர்" அவருக்கு கைகொடுத்தது.

அண்மைய தாண்டிக்குளம், நொச்சிமோட்டை நடவடிக்கையின் போது குருநகர்மத்தியூஸ்வீதி வாசி ஒருவருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது.

தம்முயிரைக் காப்பாற்ற காட்டினுள் சென்ற அவர் அங்கு நான்கு நாட்கள் சிக்கியிருந்தார்.

தண்ணீர் தாகம் ஏற்பட்ட போது, வியாபாரத்துக்கென வாங்கிக்கொண்டு வந்திருந்த கிறைப்வாட்டரை குடித்து தமது தாகத்தைப் போக்கிக் கொண்டதாக அவர் தெரிவித்தார். [இ-69]

## 2 அதிகாரி...

அவர் தனது செய்தியறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு பிளட்டூன்கள் [platoons] மன்னார் பகுதியில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை ஒன்று தோல்வியில் முடிந்தது அதனைத் தொடர்ந்து அப்பிளட்டூன்களைச் சேர்ந்த 50 இற்கும் அதிகமான படையினர் முகாமுக்கு திரும்பிக்கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகள் வைத்திருந்த ஐந்து கண்ணிவெடிகளில் சிக்கிக்கொண்டனர். பின்னர் 20 நிமிடங்கள் வரை சண்டை இடம்பெற்றது.

வடபகுதியில் இராணுவ நடவடிக்கையை அரசு முடுக்கிவிட்டிருக்கும் இவ்வேளையில் இந்தத்தாக்குதலில் படையினருக்கு பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருப்பது அரசுக்கு பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பலத்தைக் குறைத்து மதிப்பிட முடியாத ஒரு நிலைப்பாட்டை கொண்டைச்சி சம்பவம் அரசுப்படையினருக்கு உணர்த்தியிருக்[illegible] [illegible] தெரிவித்திருக்கிறார்.

# நிவாரண கொடுப்பனவுகளை உடன் வழங்க பணிப்பு

ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை தாமதமின்றி வழங்குமாறு யாழ். அரசாங்க அதிபர் அரச வங்கிகளைக் கேட்டுள்ளார்.

மீளக் குடியமர்தல், உற்பத்தித்திறன் முயற்சி நிதி உதவிகள் வழங்குவதற்கு வங்கிகளுக்கு யுத்தம் தொடங்குவதற்கு முன்னரே செயலகத்தினால் பணம் மாற்றப்பட்டிருந்தது. ஆனால் பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீளக்குடியமர்தல் நிவாரணப் பணத்தின் இரண்டாவது பகுதி [ஆயிரம் ரூபா கூட இன்னும் வழங்கப்படவில்லை.

இது குறித்து அரசாங்க அதிபருக்குப் பொதுமக்களிடம் இருந்து ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதனைத் தொடர்ந்து அவர் இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர், மக்கள்வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஆகியோரை நிவாரண உற்பத்தித்திறன் நிதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார். [அ]

# அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிதி வளம் பற்றி விசாரணை!

இலங்கையில் பணிபுரியும் சுமார் 40 சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் 70 உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் தங்களின் செயற்பாடுகள் மற்றும் நிதி வளங்கள் பற்றிய அறிக்கைகளை சமர்ப்பிக்கும் படி கோரப்பட்டுள்ளன.

அரசு சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இது சம்பந்தமாக கேள்விக்கொத்து ஒன்றை சகல நிறுவனங்களுக்கும் அனுப்பிவைத்துளது. [அ-எ]

# மூப்பனார் போட்டியிடார்

சென்னை, பெப். 19

எதிர்வரும் தமிழக சட்டசபைப் பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. கருப்பையா மூப்பனார் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"எதிர் வரும் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கும் நிலையில் அ. தி. மு. க இருப்பதால் கூட்டணி அரசு அமைக்கப்படும் என்ற பேச்சு எழாது" — என்று அவர் சொன்னார். [உ-எ]

# கிழக்கு அகதிகளுக்கு தற்காலிக வதிவிடங்கள்

யாழ்ப்பாணம், பெப். 19

கிழக்கு அரியாலைப் பகுதியில் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் அமைத்து வரும் தற்காலிக வதிவிடங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த குடும்பங்கள் தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்தோர் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் செஞ்சிலுவை அலுவலகத்தில் வந்து விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. [உ-]

## மாசிமக இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், பெப்.

மாசி மகத் திருவிழா இம்மாதம் 28 ஆம் திகதியாகும். அதனையொட்டி பல ஆலயங்களிலும் இன்று செவ்வாய் கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பமாகிறது. [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறைக் கடலில் புல்டோஸர் மூழ்கியது!

யாழ்ப்பாணம், பெப். 19

பருத்தித்துறை துறைமுகத்தில் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த புல்டோசர் இயந்திரம் கடலில் மூழ்கியது.

பருத்தித்துறை இறங்குதுறையை ஆழமாக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதன் பொருட்டு புல்டோசர் ஒன்று கடலில் கற்களை அகற்றும் வேலையில் ஈடுபட்டிருந்த சமயம், சறுக்கிச் சென்று ஆழத் தண்ணீரில் மூழ்கிவிட்டது.

அதனை வெளியே எடுப்பதற்கு நேற்று மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இதே வேளை கப்பலில் இருந்து பொருள்களை எடுத்து வரும் இழுவைப் படகு இறங்கு துறையின் மேற்குப் பக்கத்தில் அவற்றை இறக்குகிறது. [அ-15]

## புலமைப் பரிசில் பரீட்சை மார்ச் 30 ஆம் திகதி நடக்கும்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். மாவட்டத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடத்த யாழ். கல்வித் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

கடந்த ஆண்டுக்குரிய இந்தப் பரீட்சை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இதுவரை நடைபெறவில்லை.

இந்தப் பரீட்சையை நடத்தி முடிப்பதில் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களை அனுபவமாகக் கொண்டு, வடக்கில் ஜீ. சீ. ஈ. பரீட்சைகளை சுமுகமாக நடத்த வாய்ப்பு ஏற்படும் என்று வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [உ-5]

## ஓய்வு பெற்ற ஆசிரியருக்கு ஒப்பந்த ரீதியில் நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். மாவட்டத்தில் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீள பணிபுரிய வாய்ப்பு அளிக்கப்படவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கே மீள நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

ஒப்பந்த அடிப்படையில் ஓர் ஆண்டு காலத்துக்கு இவர்கள் நியமனம் பெறுவர். பின்னர் ஒப்பந்தம் அடுத்தடுத்த ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கப்பட வேண்டும்.

சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெற்ற — மேற்படி பாட — ஆசிரியர்கள் மீள நியமனம் பெற விரும்பினால் தம்மை நேரடியாக சந்தித்து, விண்ணப்பிக்குமாறு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார் [உ-5]

## ஜீ. சீ. ஈ. (சா. த.) பரீட்சைக்கு மீள விண்ணப்பிக்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு, கிழக்கில் 1990 டிசம்பர் ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மீண்டும் விண்ணப்பிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது.

பரீட்சைத் திணைக்கள ஆணையாளருடன் வடமாநில கல்விப் பணிப்பாளர் நடத்திய பேச்சுக்களை அடுத்து நேற்று முதல் இரு வாரங்களுக்குள் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த டிசம்பரில் நடைபெற்றிருக்க வேண்டிய இப்பரீட்சை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக நடைபெறாமல் போனது தெரிந்ததே. [உ-5]

---

## வல்வையில்.....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெடித்தன.

ஷெல் குண்டுகளின் சத்தங்களைக் கேட்டு தீருவிலில் ஒரு வீட்டிலிருந்தவர்கள் பதுங்குகுழியை நோக்கி ஓடினர். அப்போது அவர்கள் ஓடிச் சென்ற இடத்தில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. அக்குண்டினால் செந்திவடிவேல் மணிவண்ணன் [வயது 21] என்பவர் அந்த இடத்திலேயே மரணமானார். அவரது சகோதரியான செந்திவடிவேல் யசோதை [வயது 17], தாயார் செந்திவடிவேல் சிவரூபராணி [வயது 51] ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். [உ-15]

# ஏப்ரலில் விசேட பரீட்சைகள்; எனினும் திகதிகள் நிர்ணயமில்லை

யாழ்ப்பாணம், பெப். 19

வடக்கு - கிழக்குமாகாணத்தில் ஜீ.சி.ஈ. சாதாரண தர, உயர்தர விசேட பரீட்சைகளையும்,

ஏப்ரலில் நடத்துவதற்கு கல்வி அமைச்சும், பரீட்சைப் பகுதியும் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஆனால் திகதிஎதுவும் இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை.

பரீட்சைகளை நடத்துவது குறித்து ஆராய்வதற்காகக் கொழும்பு சென்றிருந்த வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அழைப்பின் பேரில் கொழும்பு சென்றிருந்த அவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கல்வி அமைச்சர் திரு, லலித் அத்துலத் முதலி கூட்டிய மாநாட்டிலும், விசேட பரீட்சைகளை நடத்துவது சம்பந்தமாக ஆராயப்பட்ட மாநாடுகளிலும் அவர் கலந்து கொண்டார்.

இந்த மாநாடுகளில் வடக்கு-கிழக்கில் உள்ள ஏனைய கல்விப் பணிப்பாளர்களும் பங்குபற்றினர்.

மூன்று விசேட பரீட்சைகளையும் நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக அவர்கள் சம்பந்தப்பட்ட மாநாடுகளில் தெரிவித்தனர்.

பரீட்சைகளை ஏப்ரல் மாதத்தில் நடத்துவது என்று கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டது. எனினும் அவற்றை நடத்துவதில் எழக்கூடிய நடைமுறைப் பிரச்சினைகள் பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்தன.

அதனைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் விசேட பரீட்சைகளை நடத்துவது குறித்து ஆராய்வதற்கென கல்வி அமைச்சர் உப குழு ஒன்றை நியமித்திருக்கிறார்.

பிரஸ்தாப குழுவில் கல்வி இணை அமைச்சர், கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர், பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் ஆகிய மூவர் அங்கம் வகிக்கின்றனர்.

பரீட்சைகளை நடத்துவதற்குக் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் அனுமதியைப் பெறுதல், வினாத்தாள்கள், விடைத்தாள்கள் எடுத்துச் செல்லுதல் என்பன குறித்து பிரஸ்தாப உபகுழு ஆராய்ந்து பரீட்சைத் திகதிகளை நிர்ணயிக்கும்.

அதன் முக்கிய கூட்டம் நேற்று நடைபெறஇருந்தது. [அ-3-5]

## விவசாய கல்லூரி இடமாற்றம்

வவுனியா விவசாயக் கல்லூரி இப்போது கிளிநொச்சியில் வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் இயங்குகிறது. கல்லூரியின் மூன்றாம் தவணை எதிர் வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

மாணவர்கள் அனைவரும் அடுத்தமாதம் இரண்டாம் திகதி கல்லூரி விடுதியில் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று அதிபர் அறிவித்துள்ளார்.

வவுனியா தாண்டிக்குளத்தில் இயங்கி வந்த விவசாயக் கல்லூரி தற்போதைய சூழ்நிலை காரணமாக வட்டக்கச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.

பாடசாலையை அங்கு இயங்கச் செய்வதற்கு கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் உதவிகளைச் செய்திருந்தார். [அ]

## ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப். 19

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் நவம்பர் மாதத்திற்கான ஒய்வூதியக் கொடுப்பனவுகள் நேற்று முதல் பணமாக வழங்கப்பட்டு வருகின்றன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை இக்கொடுப்பனவு வழங்கப்படும் என்று வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்தார். [உ-15]

## வங்கிக் கட்டளை பெற தரகுக் கூலி இனி இல்லை

வடமராட்சி, பெப்.19

யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் இனிமேல் வங்கிக் கட்டளை [Pay Order] எழுதுவதற்கு தரகுக் கூலி அறவிடப்படமாட்டாது.

இதுவரை அறவிடப்பட்ட தரகுக் கூலி வாடிக்கையாளருக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

இது சம்பந்தமான உத்தரவு ஒன்று இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளருக்கு கொழும்பில் இருந்து பிரதிப் பொது முகாமையாளரால் அனுப்பப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகள், மக்கள் பெரும் கஷ்டமுறும் வேளையிலும் வங்கிக் கட்டளைகளை எழுதுவதற்கு தரகுக் கூலி அறவிடுவதை ஆட்சேபித்து வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. கே. சி. ஆடியபாதன் கொழும்புத் தலைமையகத்துக்கு முறையிட்டிருந்தார்.

அவருக்கு அனுப்பிய பதிலிலேயே, பிரதிப் பொது முகாமையாளர், இப்போதைய கஷ்ட நிலையை அனுதாபத்துடன் நோக்கி அறவிட்ட தரகுக் கூலியை திரும்பத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்திருக்கிறார். [அ]

## பொம்மருக்கு தப்பியவர்கள் ஷெல் வீச்சில் சிக்கினர்!

பொம்மர் தாக்குதலில் மயிரிழையில் தப்பியவர்கள் ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்தனர்.

வல்வெட்டித்துறை தீருவிலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி வல்வையில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலின் போது மூடப்பட்ட பதுங்கு குழிக்குள் சிக்கி, பின்னர் அயலவர்களினால் மீட்கப்பட்ட இரு பெண்கள், நேற்று பலாலி ஷெல்லினால் காயமுற்றனர்.

செந்திவடிவேல் சிவரூபராணி [வயது 51], அவரது மகளான யசோதை [வயது 17] ஆகிய இருவருமே இவ்வாறு காயமுற்றனர்.

இந்தச் சம்பவத்தில் சிவரூபராணியின் மகனான செந்திவடிவேல் மணிவண்ணன் [வயது 21] உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பெண்மணியின் மற்றும் இரண்டு மகன்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தில் 1986ஆம் ஆண்டு தொண்டமானாறிலும், 1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டைத் தாக்குதல் சம்பவத்திலும் வீரமரணமடைந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-15]

## இந்திய அறிவிப்பு குறித்துக் குளறுபடி!

புதுடில்லி, பெப். 19

அமெரிக்க விமானங்களுக்கு இந்தியாவில் எரிபொருள் நிரப்புவதற்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்ததாக வெளியிடப்பட்ட அறிவிப்பில் குளறுபடி ஏற்பட்டிருக்கிறது.

''எண்ணெய் நிரப்புவது நிறுத்தப்பட்டதான அறிவிப்பை தான் பத்திரியைப் படித்துத்தான் அறிந்ததாக பிரதமர் சந்திரசேகர் கூறினார்'' — என்று யு. என். ஐ செய்தி நிறுவனம் நேற்று தெரிவித்தது.

இதற்கிடையில் —

நேற்றும் அமெரிக்கப் போர் விமானம் ஒன்று பம்பாய் விமான நிலையத்தில் இறங்கி எரிபொருள்களை நிரப்பிச்சென்றது. [உ-எ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org